23.10.2025

<u>O.S.353/2023 வா.சா.1. தங்கராசு, த/பெ. முத்தடைக்கன்</u>

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

2008-ம் ஆண்டு புல எண் 480/12-ல் 10 ஏர்ஸ் இடத்தினைப் பொறுத்து நானும் எனது தாயாரும் 2-ம் பிரதிவாதி விஜயராகவன் என்பவருக்கு கிரையம் பதிவு செய்து கொடுத்தோம். அந்த கிரையப் பதிவு ஆவணத்தின் சான்றிட்ட நகல் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். 05.02.2008 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1. மேற்படி பி.வா.சா.ஆ.1. ஆவணத்தில் நான்கெல்லை விவரத்தில் ஆற்றிற்கு தெற்கு, அஞ்சுகா புஞ்சை நிலத்திற்கு வடக்கு, சரஸ்வதி புஞ்சைக்கு கிழக்கு, விஜயராகவன் புஞ்சைக்கு மேற்கு என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் விஜயராகவன் புஞ்சைக்கு மேற்கு என்பது விஜயராகவன் என்பவர் 480/13-ஐப் பொறுத்து கிரையம் பெற்ற இடம். பி.வா.சா.ஆ.1. ஆவணத்தில் 2006-ம் ஆண்டு புல எண் 480/12-ஐப் பொறுத்து வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டதாகவோ 10 ஏர்ஸ் இடம் கண்ணையாவுக்கு ஒதுக்கியுள்ளதாகவோ இதில் கண்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1. ஆவணத்தில் நான்கெல்லை விவரங்களில் கண்ணையாவுக்கு சொத்து உள்ளதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். 2006-ம் ஆண்டுக்குப் பிறகு நானும், என் தாயாரும் 10 ஏர்ஸ் இடத்தினையும் கண்ணையா என்பவர் 10 ஏர்ஸ் இடத்தினையும் தனித்தனியாக அனுபவம் செய்து வந்ததற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண் 480/12-ல் எங்கள் குடும்பத்திற்கு மொத்தமாகவே 10 ஏர்ஸ் இடம்தான் பாத்தியம் என்றாலும் அந்த 10 ஏர்ஸ் இடத்தினைதான் ஆவண எண் 211/2008-ன் படி 2-ம் பிரதிவாதிக்கு நானும் என் தாயாரும் கையெழுத்திட்டு பதிவுப்பத்திரமாக கொடுத்துள்ளோம் என்றும் அவ்வாறு பத்திரம் போடும்போது என் சகோதரர் கண்ணையா வெளியூரில் இருந்ததால் அவர் கையெழுத்து போடவில்லை என்றாலும் அதனை சாதகமாக எடுத்துக்கொண்டு கண்ணையாவிற்கு 10 ஏர்ஸ் இடம் மேற்படி புல எண்ணில் இருப்பதுபோலவும் அதனை எங்கள் பெயருக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதிக்கொடுத்ததுபோலவும் வா.சா.ஆ.17-ஐ மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.17-ன் அடிப்படையில் வா.சா.ஆ.18-ஐ சட்டத்திற்குப் புறம்பாக ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. என் சகோதரர் கண்ணையா தற்போது உயிருடன் உள்ளார். அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18-ல் எந்த வட்டாட்சியரின் செயல்முறைப்படி உத்தரவு ஏற்பட்டது என்று எந்தக் குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18-ல் எந்த வட்டாட்சியரின் பெயரும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

எனக்கு அந்த வட்டாட்சியரின் பெயர் தெரியாது. அப்போதிருந்த வட்டாட்சியரை எங்கள் வசப்படுத்திக்கொண்டு ஏதோ ஒரு வழியில் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.18 ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. தாசில்தாரிடம் மனு கொடுத்து அளந்துப் பார்த்து எனக்கு உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்பட்டது. எந்த தேதியில் மனு கொடுத்தேன், எந்த தேதியில் அளந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்வது போல் மனு கொடுக்கவுமில்லை, அளக்கவில்லை என்றும் குறுக்கு வழியில் அதுபோல் பட்டா பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதுபோல் அளப்பதற்கும், உட்பிரிவு செய்துகொடுப்பதற்கும் எங்களுக்கு புல எண் 480/12-ல் சொத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. செல்லத்தகாத, சட்டத்திற்கு புறம்பான ஆவணங்களான வா.சா.ஆ. 17 மற்றும் வா.சா.ஆ.18-ன் அடிப்படையில் கணினி சிட்டாவான வா.சா.ஆ.19 முதல் வா.சா.ஆ. 24 வரையிலான ஆவணங்களையும் வரி ரசீதுகளான வா.சா.ஆ.26 முதல் வா.சா.ஆ.28 வரையிலான ஆவணங்களையும் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. புல எண் 480/12-ஐப் பொறுத்து அனைத்து பாகஸ்தர்களிடமிருந்து அவர்களுடைய பங்கு வீதத்தைப் பொறுத்து 1,2 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. 3-வது அயிட்ட சொத்து 497/5-ன் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும் 4-1/2 ஏக்கர். எத்தனை நபர்கள் பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் 11 நபர்கள் பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டிருந்தது. மேற்படி புல எண்ணில் என் சகோதரர் அனுபவம் செய்து வந்ததைக் காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி புல எண் 497/5-ல் எந்த நான்கெல்லைக்குட்பட்ட பகுதியை எனது சகோதரர் பெரியசாமி அனுபவம் செய்துவந்தார் என்று சொல்ல முடியுமா என்றால் முடியும். வடக்கில் வாரி, கிழக்கிலும் தெற்கிலும் சின்னையா என்பவரின் இடம், மேற்கில் கோவிந்தன் வகையறா இடம். மேற்படி சின்னையா, கோவிந்தன் ஆகியோரின் சொத்துக்களின் உட்பிரிவு தெரியுமா என்றால் ஐந்து ஆகும். என் தாயார் மேற்படி புல எண்ணில் எனக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணத்தில் வடக்கில் வாரி, கிழக்கிலும் தெற்கிலும் சின்னையா என்பவரின் இடம், மேற்கில் கோவிந்தன் வகையறா இடம் என்ற நான்கெல்லை விவரங்களைத்தான் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நான் சொல்வது போல் பூஸ்திதியில் சொத்து ஏதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் ஊரில் முத்தடைக்கன் என்று எத்தனை பேர் இருக்கிறார்கள் என்றால் நிறைய பேர் இருக்கிறார்கள். என் சகோதரர் பெரியசாமி இறக்கும்போது 40 வயது இருக்கும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.33-இல் முத்தடைக்கன் மகன் பெரியசாமியின் வாரிசுச் சான்றில் வாரிசாக திருமதி.மு.மாரியாயி, க/பெ. முத்தடைக்கன் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மாரியாயின் வயது 51 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.33-இல் இறந்துபோன பெரியசாமியின் வயது 32 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1-ஆன நானும் எனது தாயாரும்

எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் முத்தடைக்கன் மனைவி மாரிக்கண்ணு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயார் பெயர் மாரியாயி என்ற மாரிக்கண்ணு ஆகும். என் தாயாருக்கு மாரியாயி என்ற மற்றொரு பெயரும் உண்டு என்பதைக் காட்டுவதற்கு இந்த வழக்கில் உள்ள ஆவணங்கள் தவிர வேறு பொதுவான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.3-ஆனது புல எண் 480/12-ல் எங்கள் குடும்பத்தில் சொத்து இருந்தது என்பதைக் காட்டும் ஆவணம் ஆகும். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தில் முத்தடைக்கன் மனைவி மாரிக்கண்ணு என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மாரியாயி என்ற பெயர் இல்லை என்று சொன்னால் சரிதான். புல எண் 497/5-ன் கூட்டுப் பட்டாவில் கண்ட முத்தடைக்கன் மகன் பெரியசாமிக்கும் என் சகோதரர் என்று சொல்லப்படும் பெரியசாமிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி மேற்படி புல எண் 497/5-ன் கூட்டுப் பட்டாவில் மாரியாயி என்ற மாரிக்கண்ணு என்று மோசடியாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு சேர்த்த ஆவணம் தான் வா.சா.ஆ.34 மற்றும் வா.சா.ஆ.35 என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.34 மற்றும் வா.சா.ஆ.35-ன் அடிப்படையில் எனது பெயருக்கு வா.சா.ஆ.36-ஐ மோசடியாக ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.36-ல் கண்டுள்ள சொத்து விவரமும் தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.37-ல் எந்த வட்டாட்சியரின் முன்னிலையில் செயல்முறை ஏற்பட்டது என்றோ வட்டாட்சியர் பெயரும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.37 சட்டத்திற்கு புறம்பானது என்றாலும் செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.18, வா.சா.ஆ.37 போன்ற ஆவணங்களை எல்லாம் ஏற்படுத்திய வட்டாட்சியரை வரவழைத்து விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் வட்டாட்சியரிடம் மனு கொடுத்து அந்த ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டன. நான் முறையாக மனு கொடுத்து ஆவணங்களை ஏற்படுத்தியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.34, வா.சா.ஆ.35, வா.சா.ஆ.37 ஆவணங்கள் மோசடியாக பெறப்பட்ட ஆவணங்கள் என்பதால் அவை செல்லக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு தேவைப்படும் என்பதற்காக வா.சா.ஆ.39 முதல் வா.சா.ஆ.54 வரையான ஆவணங்களை முன்யோசனை செய்து வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.39 முதல் வா.சா.ஆ.54 ஆவணங்களும் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. புல எண் 497/5-ல் கூட்டுப்பட்டாவில் 2012-ல் தான் சேர்த்தோம் என்றால் 2011-ல் சேர்த்தோம். கூட்டுப்பட்டாவில் சேர்த்த பிறகு 2011-க்கு பிறகு என் தாயார் பெயரில் மேற்டிப சொத்திற்கு வரி எதுவும் செலுத்தியுள்ளோமா என்றாலும் அவ்வாறு வரி ரசீதுகளை வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றாலும் அதுபற்றி என் தாயாரைத்தான் கேட்கவேண்டும். புல எண் 497/5-ன் கூட்டுப்பட்டாவின் பட்டா எண் 2733. இந்த பட்டாவைத் தவிர என் தாயார் பெயரில் வேறு ஏதேனும் சொத்திற்கு கூட்டுப்பட்டா உள்ளதா என்றால் உள்ளது பட்டா எண் ஞாபகமில்லை. என்

தாயார் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்ய முடியுமா என்றால் என் தாயாரைத்தான் கேட்க வேண்டும். என் தாயார் பெயரில் உள்ள எத்தனை பட்டாவிற்கு மாரியாயி என்றும் மாரிக்கண்ணு என்றும் மாரியாயி (எ) மாரிக்கண்ணு என்றும் பெயர் உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து 1,2 பிரதிவாதிகள் சரியான பிரதிபலனுக்கு கிரையம் பெற்று அதனடிப்படையில் 1-ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றும் அதனை நான் வட்டாட்சியரை தன்வசப்படுத்தி பட்டா என் பெயருக்கு மாற்றிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டாவைப் பொறுத்து தவறாக ஏற்பட்டதாக கூறி நான் மேல்முறையீடு எதுவும் செய்து என் பெயரில் பட்டா மாறுதல் செய்தேனா என்றால் வட்டாட்சியர் சுரேஷ் என்பவர் எந்த ஆவணமும் இன்றி 1-ம் பிரதிவாதி பெயருக்கு கணினியில் ஏற்றிவிட்டார். என் ஆவணங்களை அவரிடம் காண்பித்து கேட்டபோது வட்டாட்சியர் தவறு நடந்துவிட்டதாக கூறி மீண்டும் என் பெயருக்கு மாற்றிவிட்டார். மேல் முறையீடு எதுவும் செய்தேனா என்றால் இல்லை. என் பெயரில் ஏற்பட்ட பட்டாவை எதிர்த்துதான் 1-ம் பிரதிவாதி புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்தார் என்றால் சரிதான். நான் 1-ம் பிரதிவாதி, வட்டாட்சியர் ஆகியோர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் 10.02.2020 அன்று வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் முதன் முதலாக ஆஜரானேன் என்றால் ஆஜரானேன் தேதி ஞாபகமில்லை. கொரோனா ஏற்பட்டதால் 28.09.2020-ல் அடுத்த வாய்தா வந்தது என்றால் தேதி ஞாபகமில்லை. ஆனால் 7,8 மாதங்கள் கழித்து தான் வந்தது. பின்னர் ஒரு மாதம் கழித்து வாய்தா போட்டார்கள் என்றால் சரிதான். அந்த வாய்தாவின் இடைப்பட்ட காலத்தில் தான் புதுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். கோட்டாட்சியர் எந்தவித உத்தரவும் போடக் கூடாது என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியரை மிரட்டும் தொனியில் உத்தரவு எதுவும் போடக்கூடாது என்று அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் வருவாய் ஆவணங்கள் மற்றும் பதிவு ஆவணங்களை பரிசீலனை செய்தும் நீதிமன்றத்தில் தடை உத்தரவு எதுவும் இல்லை என்று பரிசீலனை செய்துதான் மேற்படி மேல்முறையீட்டு மனுவில் உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியரிடம் எனது தரப்பில் எழுத்துப்பூர்வ பதிலைத் தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே கால தாமதம் செய்தும் மிரட்டியும் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்தேனா என்றால் செய்தேன். அந்த மேல்முறையீடு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலரிடம் செய்த மேல்முறையீடு முறையான விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையில் 1,2 பிரதிவாதிகள் போர்ஜெரியான ஆவணங்கள் மூலம் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்ததாக கூறியுள்ளது குறித்து குற்ற வழக்கு தாக்கல்

செய்தேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் முதல் விசாரணையில் வட்டாட்சியர் சுரேஷ் என்பவர் உதவியுடன் 1-ம் பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக சில சொத்துக்களை ஆக்கிரமித்துள்ளதாக கூறியுள்ளதற்கு ஆதாரங்களோ, ஆவணங்களோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வட்டாட்சியர் சுரேஷ் என்பவரை தனிப்பட்ட முறையில் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. என் முதல் விசாரணையில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களுக்கு செட்டில்மெண்ட் காலத்தில் தனித்தனி பட்டா வழங்கவில்லை என்றாலும் கூட்டாகத்தான் பட்டா வழங்கினார்கள் என்றாலும் சரிதான். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக கூட்டுப்பட்டாவின் நகல் கொடுத்தார்கள். கூட்டுப்பட்டாவாக இருப்பதால் நான் என்னுடைய பகுதியை மீறி மேற்கொண்டு இடம் இருப்பதாக பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்துகொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்குள்ள பகுதியைத்தான் நான் அனுபவம் செய்து வருகிறேன். புல எண் 480/12-ல் ஏற்கெனவே எங்கள் குடும்பத்திற்கு உள்ள சொத்தினைப் பொறுத்து 2-ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டதால் அந்த புல எண்ணில் மேற்கொண்டு சொத்து எதுவும் இல்லை என்றால் சரியல்ல. புல எண் 497/5-ல் எங்கள் குடும்பத்திற்கு எவ்வித சொத்தும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1-ம் பிரதிவாதியை மிரட்டி அவரிடம் பணம் பறிக்கும் எண்ணத்தில் அவர்மீது அவதூறாக பொய்யான சங்கதியைக் கூறி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.61 முதல் வா.சா.ஆ.64 வரையான ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு எந்தவித உரிமை இல்லாத நிலையில் உரிமை இருப்பதாக பொய்யான முகாந்திரம் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை.)